STC.No.974 /2024 நாள் : 18.09.2025.

PW 1-பரமகுரு த/பெ, வேலுசாமி

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1)எதிரி எனக்கு எந்த ஆண்டு அறிமுகம் ஆனார்கள் என்றால் 2019 - 2020 காலகட்டங்களில் தெரியும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் மாட்டுத் தீவணம் விற்பனை செய்து வருகிறேன். தொழில் ரீதியாக எதிரி எனக்கு தொடர்பு உள்ளதா என்றால் தொடர்பு இல்லை. எதிரியின் தகப்பனார் எனக்கு அறிமுகம் ஆனார் பின்னர் எதிரி எனக்கு அறிமுகம் ஆனார். எதிரி கடன் கொடுத்தற்கான காசோலை எனது தோட்டத்தில் வைத்து தான் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி காசோலை வங்கியில் முன்னிட்டு அடுத்த நாள் திருப்பி அனுப்பட்டது என்று சொன்னால் சரிதான். எத்தனை வருடங்கள் பழக்கத்தின் அடிப்படையில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சுமார் 6 வருடங்கள் பழக்கத்தின் அடிப்படையில் கடன் கொடுத்தேன். நான் கடனை எந்த வகையில் வழங்கினேன் என்றால் ரொக்கமாக வழங்கினேன்.

2) நான் ரொக்கமாக கடன் வழங்கியதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் ஆவணங்கள் பெறாமல் எதன் அடிப்படையில் கடன் கொடுத்தேன் நம்பிக்கையின் அடிப்படையில் கடன் கொடுத்தேன். இது போன்று நான் வேறு யாருக்கேனும் கடன் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வட்டி தொழில் செய்தேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத் காலத்தில் அவர் என்ன வேலை செய்தார் என்றால் அவர் அப்போது தான் வெளிநாட்டில் இருந்து வந்தார். எவ்வளவு வட்டுக்கு கடன் கொடுத்தேன் என்றால் 1.50 வட்டிக்கு கடன் கொடுத்தேன். கடனை திரும்ப கொடுப்பதற்கு கால கொடு ஏதேனும் நிர்ணயம் செய்தேனா என்றால் ஏதுவும் செய்யவில்லை.

3) நான் காசோலை திரும்ப வாங்கும் போது எதிரியை நேரில் சந்தித்து காசோலையை திருப்பட்டதற்குகான தகவலை தெரிவித்தேனா என்றால் தொலைபேசி மூலம் தெரிவித்தேன்.

எதிரியின் வீட்டிற்கு நான் சென்று இருக்கிறேனா என்றால் சென்று இருகிறேன். எதிரி எனக்கு எந்த விதத்திலும் பழக்கம் இல்லை. நான் அனுப்பிய அறிவிப்புக்கு எதிரி பதிலறிவிப்பு அனுப்பினாரா என்றால் நான் பெறவில்லை. எனது கடையில் குருசாமி என்பவர் பணிபுரிந்தார் என்றால் வண்டியே இல்லை. குருசாமி என்பவர் இடம் தான் எதிரி கடன் வாங்கினார் என்பவதாலும் அந்த கடன் விசயத்தில் தலையிட்டு நான் **மூன்று காசோலைகள்** 99.000/-, 99.000/-, 38.000/- காசோலைகள் எதிரியும் எதிரியின் தாயார் கையொப்பமிட்ட நான்கு பச்சை தாள்கள் மற்றும் எதிரி மற்றும் அவரது தாயாரின் ஆதார், வருமான அடையாள அட்டை, ஆகியவற்றை ஆகஸ்ட்டு 2023 ல் மிரட்டி பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

4)கடந்த 29.02.2024 ல் எதிரியை கடன் சம்பந்தமாக நான் எனது கடைக்கு வரச்சொன்னேனா என்றால் நான் அப்படி யரையும் வரசொல்லவில்லை. இவ்வழக்கிற்காக பொய் சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமில்லை குருசாமி யாரு என்றே எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த விதமாக சட்டப்படியான கடனும் நான் வழங்கவில்லை அதனால் மேற்படி காசோலை தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.09.18 18:28:59 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

 18.09.2025.